செ.வெ.எண்: 499/2017 (3) நாள்: 09-10-2017

# தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் அறிவிப்பு

தீபாவளி திருநாளின் போது, பொதுமக்கள் எளிதாக பயணம் செய்யும் வகையில் 15.10.2017, 16.10.2017 மற்றும் 17.10.2017 ஆகிய நாட்களில் மட்டும் கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து அனைத்து இருக்கைகள் பூர்த்தியான பேருந்துகள் தாம்பரம், பெருங்களத்தூர் செல்லாமல் மதுரவாயல், பூவிருந்தவல்லி, நசரத்பேட்டை வெளிச்சுற்றுச் சாலை (OUTER RING ROAD) வழியாக வண்டலூர் செல்ல வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே தாம்பரம் மற்றும் பெருங்களத்தூரில் இருந்து பயணம் செய்ய முன்பதிவு செய்த பயணிகள் தாம்பரம் மற்றும் பெருங்களத்தூர் பேருந்துநிலையங்களில் ஏறுவதற்கு பதிலாக தற்காலிகமாக 15.10.2017, 16.10.2017 மற்றும் 17.10.2017 ஆகிய நாட்களில் மட்டும் தற்காலிகமாக மாற்றியமைக்கப்பட்டுள்ள ஊரப்பாக்கம் (CMDA வளாகம்– கிளாம்பாக்கம்) தற்காலிக பேருந்து நிறுத்தத்திற்கு சென்று பயணம் மேற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எனவே பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்கள் மேற்படி போக்குவரத்து மாற்றங்களுக்கு ஏற்ப தங்கள் பயணத்தினை அமைத்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலாண் இயக்குநருக்காக
9/10/17